(முற்பகல் 9-30)

2. அறிவிப்புகள்.

அ. மானியக் கோரிக்கை மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான நடைமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7 ஆம் தேதி மாலை 3-00 மணிக்குள் கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்துள்ளேன்.

மானியக் கோரிக்கை எண்.	மானியக் கோரிக்கைகள்.
12	1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்
25	சின்கோனா
45	காட்டு வளத் துறை
4	தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்
54	காட்டுவள மூலதனச் செலவு
1	நிலவரித் துறை
2	தகவல் மாநில ஆயத் தீர்வை
4	பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம்
5	முத்திரைத் தாள்கள் நிர்வாகம்
41	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
46	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்
17	கல்வி
13	நீதி நிர்வாகம்
14	சிறைச்சாலைகள்
23	கூட்டுறவு
29	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
33	வீட்டு வசதி.

1980 ஜூலை 4] [பேரவைத் தலைவர்]

இதர மானியக் கோரிக்கைகளின் மீதான வெட்டுத் தீர்மானங்கள் ஜூலை 9 ஆம் நாள் மாலை 3-00 மணிக்குள் கொடுக்கவேண்டுமெனவும் தீர்ணயிக்கின்றேன்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான படிவங்களை சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் 1-வது பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு

இ. வினாக்களுக்கான விடைகளை பதினைந்து நாட்களுக்குள் துறைகள் அனுப்ப வேண்டுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பெற்ற வினாக்கள் அனுமதிக்கப்பெற்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதுவரை 166 உடுக்குறியிட்ட வினாக்களும், 92 உடுக்குறியிடாத வினாக்களும் துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பேரவை விதிகளின்படி 42 நாட்கள் என்றுள்ள உச்சகால அளவு வரை காத்திராமல், அதிகபட்சமாக 15 நாட்களுக்குள்ளாக விடைகளைத் தயாரித்து அனுப்ப ஆவன செய்யும்படி மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. ரா. உமாநாத் : தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்பை வரவேற்கிறேன், 15 நாட்களுக்குள் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதில்கள் அனுப்ப வேண்டும் என்பதை. இதில் ஒரு பிரச்னை எழுகிறது. அவர்கள் அப்படி அனுப்பவில்லை என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? இப்போதுள்ள ரூல்ஸ்படி ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டின் என்றால் ஏழு நாட்களுக்குள் தேதி போட்டு தங்களுக்கு அனுப்ப வேண்டும். இன்றைய நடைமுறை என்னவென்றால், இலாக்காக்கள் அவரவர்கள் சௌகரியப்படி இப்போது உங்கள் ஆபீசுக்கு அனுப்புகிறார்கள். அப்போதுதான் தேதி போடப்படுகிறது. இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அவை நடக்கும்போது அவையின் தேவைக்கு உட்பட்டு அதற்கு அட்ஜஸ்ட் செய்து அதிகாரிகள் அனுப்புவதா அல்லது அதிகாரிகள் சௌகரியப்படி, அவர்கள் கன்வீனியன்ஸ்படி அட்ஜஸ்ட் செய்து அவை செயல்படுவதா என்ற பண்டமன்டல் க்வஸ்டின் எரெயிஸ் ஆகியிருக்கிறது.

The Executive is subject to the necessitives and conveniences of this House. The rights of the House are supreme. The Executive Officers must submit themselves to the needs of the House.